27—

## தூத்துக்குடி அரசு பொது மருத்துவமனையில் நவீன வசதிகள் ஏற்படுத்துதல்

***36455—திரு. வி. பி. ஆர். ரமேஷ் :**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தூத்துக்குடி அரசு பொது மருத்துமனையில் நவீன வசதிகளுடன் கூடிய எக்ஸ்ரே கருவி, அறுவை சிகிச்சை கருவிகள் மற்றும் கூடுதல் படுக்கை வசதிகள் செய்து தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தூத்துக்குடி பொது மருத்துவமனையில் ஏற்கனவே படுக்கை வசதியுடன் எக்ஸ்ரே பிளான்ட் இயங்கி வருகிறது. அறுவைச் சிகிச்சைப் பிரிவு போதுமான வசதிகளுடன் இயங்கி வருகிறது.

**திரு. வி. பி. ஆர். ரமேஷ் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி நகரம், சென்னைக்கு அடுத்தபடியாக உள்ள துறைமுகமாகவும், தொழில் நகரமாகவும் உள்ளது. அங்கே உள்ள பொது மருத்துவமனையில், முன்பு இருந்ததைவிட தற்போது மருத்துவ வசதி நல்லபடியாக உள்ளது. தூத்துக்குடி மாவட்டத் தலைநகராகவும், தொழிலாளர்கள் அதிகமாகவும், மக்கள் தொகை அதிகமாகவும் உள்ள நகரமாக இருப்பதால், அங்கே படுக்கை வசதிகள், ஆம்புலன்ஸ் வண்டி, மற்றும் அதிநவீன சிகிச்சைக் கருவி வசதிகள் செய்து தரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே 516 படுக்கைகள் அங்கே இருக்கின்றன. எக்ஸ்ரே கருவிகளும், போதுமான எல்லாக் கருவிகளும் இருப்பதாகத் தகவல் கொடுத்திருக்கிறார்கள். இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதை வைத்து, துறையின் மூலமாக ஆய்வு செய்யச் சொல்லி நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

முற்பகல் 10-35

**திரு. வி. பி. ஆர். ரமேஷ் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், புரட்சித் தலைவி அவர்களுக்கும் நன்றி தெரிவித்து, தூத்துக்குடி முத்தையாபுரம் பகுதியில் ஒரு லட்சம்

தொழிலாளர்களுக்கு மேல் அதிகமாக வசிப்பதால் அங்கு ஒரு மருத்துவமனை அமைத்துத் தரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது தூத்துக்குடியிலிருந்து எவ்வளவு தூரத்தில் இருக்கிறது என்ற தகவல் என்னிடம் இல்லை. இது தூத்துக்குடி நகரத்திற்குள்ளே இருந்தால் இந்த மருத்துவமனையையே பயன்படுத்திக் கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. எஸ். டேனியல்ராஜ்.

**திரு. எஸ். டேனியல்ராஜ் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் இன்றைய தினம் 24 டாக்டர்களே பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இதன் காரணமாக வளர்ந்து வருகின்ற தூத்துக்குடி நகரத்தைச் சார்ந்த பொதுமக்கள் சிகிச்சை பெறுவதற்கு மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே காலியான பணியிடங்களை நிரப்புவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது போதிய அளவிற்கு மருத்துவர்கள் இருப்பதாகத் தான் எனக்குத் தகவல் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் எவ்வளவு மருத்துவர்கள் தேவையோ அந்த அளவிற்கு அங்கே நிரப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். காலியிடங்கள் எதுவும் இருப்பதாக எனக்குத் தகவல் கொடுக்கப்படவில்லை. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்லியிருக்கின்ற காரணத்தால், அதைப்பற்றி ஆய்வு செய்து, ஒரு சில அதிகாரிகளைக் கேட்டு நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 28, திரு. கே. தவசி, மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்.

**28—**

## ஆண்டிபட்டியில் பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தின் கிளை அமைத்தல்

*** 22708**—திரு. கே. தவசி :

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், ஆண்டிபட்டியில் பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தின் கிளை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?